[1977 ஜூலை 29]

மெட்ராஸ் இண்டஸ்டிரியல் லைனிங் நிறுவனம், அம்பத்தூர்

*3 வினு.—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ''மெட்ராஸ் ரப்பர் லைனிங் நிறுவனம்'' கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்சாலையினைத் திறக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மெட்ராஸ் இண்டஸ்டிரியல் லைனிங் லிமிடெட் நிறுவனத் தொழிலாளர்கள் 9—5—1977 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(ஆ) சென்னை தொழிலாளர் துறை அலுவலர்களால் இப்பிரச்சினை சமரச முயற்சிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் ஒரு சுமுகமான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. ஆதலால் சம்பளம் மற்றும் பஞ்சப்படி விகிதங்களில் மாற்றம் குறித்த பிரச்சினைகள் மீதான தகராறு நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடக்கிறது. நடுவர் தீர்ப்புக்குப் பிறகும், எதுவும் செய்யப்படவில்லை. ஆகவே அண்ணு வழியில், பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க ஏதாவது அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த தொழிற்சங்கம் உறுப்பினர் அவர்களுக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. அந்த அளவுக்கு தொழிற்சாலையின் பெயரை ஒழுங்காக தெரிவித்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். ரப்பர் லைனிங் பாக்டரி என்று இல்லை. சரியான பெயர் மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் லைனிங் லிமிடெட் என்பதாகும். இனிமேலாவது இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாமல் இருப்பது நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக 3—5—1974 அன்று அந்தத் தொழிலாளர்கள் ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். அந்த ஒப்பந்தம் 31—3—1977 அன்று முடிந்து விடுகிறது. அதன் பின்னுல், 1—4—1977 அன்று சில கோரிக்கைகளை வைத்தார்கள். கோரிக்கைகளின் மீது பேச்சுவார்த்தை நடந்தது. இதன் பேரில் சமரசம் உடனடியாக ஏற்படாத காரணத்தால் 2—5—1977 அன்று வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து, 15—5—1977 அன்று வேலை நிறுத்தம் செய்வதாகக் கூறினுர்கள்.

ஆனால் 9—5—1977 அன்றே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு விட்டார்கள். 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்; ஆனால் அதற்கு முன்னதாகவே 9—5—1977 அன்றே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு விட்டார்கள். லேபர் ஆபீசர் மூன்று முறை சமரச பேச்சுவார்த்தைகள் நடத்தினர். வெற்றி பெறாத காரணத்தால் சமரச முறிவு அறிவிப்பு 9—6—1977 அன்று கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் அசிஸ்டெண்ட் லேபர் கமிஷனர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 28—6—1977 அன்று பேச்சுவார்த்தை நடத்தினர்; 2—7—1977 அன்றும் பேச்சுவார்த்தை நடந்தது. அப்போது ஒரு ஒப்பந்தம் ஏற்படாத காரணத்தால், 25—7—1977 அன்று சம்பளம், பஞ்சப்படி பிரச்சினைகள் பற்றி தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்ப நல்ல சாத்தியக்கூறுகள் ஏற்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய திருத்தத்திற்கு நன்றி. நான் அந்தத் தொழிற் சங்கத்திற்குத் தலைவனாக இல்லை. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் என்னிடம் இந்தப் பிரச்னை தெரிவிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னிடம் ரப்பர் பாக்டரி என்று தான் சொல்லப்பட்டது. அப்படி அதில் தவறு இருந்ததை மாற்றி போட்டிருக்கிறார்கள். இப்படி மாற்றிப் போடுவதற்குத் தான் சர்க்கார், அதிலுள்ள இலாக்காக்கள், அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள். தொழிலாளர் சார்பாக கொடுக்கப்பட்டதில், ஏற்பட்ட ஒரு தவறான வார்த்தையை வைத்துக்கொண்டு இவ்வளவு விளையாடத் தேவையில்லை. அண்ணா அவர்கள் வழியில், வாடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறீர்கள் என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு பிரச்னையை நன்றாகத் தெரிந்துக்கொண்டு பேசுவதுதான் அண்ணா அவர்கள் வழி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கம்பெனியின் பெயர் ரப்பர் பாக்டரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது தவறு என்பதை இருவருமே தெரிந்துக்கொள்வது நல்லது என்பதை இருவருக்குமே ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். கேள்வியைப் போடும்போது, தாங்கள் அதன் தலைவராக இல்லாத காரணத்தால் (அதற்கு ஐ.என்.டி.யூ.சி. சங்கம் தலைவர்) அதன் உண்மையான பெயர் என்ன, அந்த கம்பெனியின் பிராபிட் அண்டு லாஸ் அக்கௌண்ட், பாலன்ஸ் சீட் என்ன என்பதையெல்லாம் பார்த்துவிட்டு, உண்மையான பெயரை சரியாகக் கொடுத்திருந்தால், அது எங்களுக்கும் உதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் கொடுத்தது போன்ற ஒரு நிறுவனம் அந்தத் பெயரில் இல்லை என்று இந்தக் கேள்வியையே தள்ளி இருக்க முடியும். இருந்தாலும் அப்படிச் செய்யக் கூடாது என்ற காரணத்தினால், அவைகளை யெல்லாம் தெரிந்து சொன்னோம். இதை உறுப்பினர் அவர்கள் நல்லெண்ணத்தோடு ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

1977 ஜுலை 29]

திரு. க. அன்பழகன் : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே ஒரு கேள்விக்கு அவையிலே பதில் தெரிவிக்க ஏற்கப்பட்டு விடுமானுல், அதற்குப் பின்னுல் அந்தக் கேள்வி சட்ட மன்றத்தினுடைய பொதுச் செல்வமாக, பொதுப் பிரச்னையாக ஆகிவிடுமே தவிர, தனிப்பட்ட ஒரு உறுப்பினர் சம்பந்தமானதாகாது என்பது சட்டமன்றத்திலே நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் ஒரு மரபாகும். எனவே, இந்தக் கேள்வி குறித்து பதில் சொல்கின்ற அமைச்சர் அவர்கள், முதலில் பதில் சொன்ன பிறகு, உறுப்பினரின் தவறை, குற்றத்தைச் சரி செய்வதாக, பெயரைத் திருத்தியதாகக் சுட்டிக் காட்டுவது இந்தச் சட்ட மன்றத்தின் சிறந்த மரபுக்கு ஏற்றதல்ல என்பதை தலைவர் அவர்கள்தும் நீண்டகால அனுபவத்திலே அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, கேள்வியைப் பொதுச் செல்வமாகக் கருத வேண்டுமே அல்லாது, கேள்வியை முதலில் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பதிலும் அளித்து விட்டு, பின்னுல், தவறைச் சுட்டிக் காட்டுவது சட்டமன்ற மரபுக்கு ஏற்றதல்ல என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேராசிரியர் ஆவார்கள். அதனுலேயே அவர் சொல்வதை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியாது. என்றுலும் மன்றத் தலைவர் அவர்கள் இதைப்பற்றி அவர்களுடைய கருத்தைச் சொன்னுல், அதை நான் ஏற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கருத்தை பேராசிரியர் சொன்னுர் என்பதற்காக அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் இந்தக் கருத்தை பேராசிரியர் என்ற முறையில் குறிப்பிடவில்லை. இந்த மன்றத்தின் உறுப்பினர் என்கின்ற முறையில்தான் இப்பிரச்னையை எழுப்பினுர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விமீது துணைக் கேள்விகள் கேட்கப்படும்போது, பொதுப்படையான எண்ணத்தோடு கேள்வியும் இருக்கவேண்டும் ; பதிலும் இருக்க வேண்டும். ஆகவே தனிப்பட்டவர் பற்றி நேரடியான கேள்வியும் போடக் கூடாது ; பதிலும் இருக்கக் கூடாது. இதை அவையிலே உள்ளவர்கள் தெரிந்துகொண்டு, ஒத்துழைக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகின்ற உரிமை உண்டா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

[1977 ஜூலை 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் எந்த நேரத்திலும் எழுப்பலாம். விதிகள் இருக்கின்றன.

திரு. க. அன்பழகன் : அதைப் பற்றியும் நான் அறிந்த அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். கேள்வி நேரத்திலே கேள்வி கேட்டு விடை தரப்படுகிற முறைகளிலே வருகிற தவறுகளைப் பற்றிக் கூற 'பாயின்ட் ஆப் ஆர்டர்' எழுப்பலாம். கேள்வி நேரத்தில் சட்டமன்ற நடைமுறைகளைப் பற்றிய வேறு பிரச்சினைகளைக் கொண்டுவந்தால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது தவறு என்பது நான் அறிந்து கொண்டிருக்கிற சாதாரண உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சம்பந்தப்பட்டதை ஒழுங்குப் பிரச்சினையாக எடுத்துச் சொல்லுவதில் தவறு இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மூடப்பட்ட இந்த தொழிற்சாலை லேபர் ஆபீசருடைய கன்சிலியேஷனுக்குப் பின்னல் துணை ஆணையாளருடைய பரிசீலனைக்குப் பின்னல் இது நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. பொதுவாக இப்படிப்பட்ட தொழிலகங்களில் பிரச்சினைகள் எழுகின்றபோது லேபர் ஆபீசர் கன்சிலியேஷன் எடுக்கிற நேரத்தில் அவருக்கு மிகக் குறைந்த அளவுக்கே அதிகாரம் இருக்கிற காரணத்தால் அவர் எதையும் செய்ய முடியாத நிலைமையில் அரசுக்கு அனுப்புகிற நிலைமை இருப்பதால் லேபர் ஆபீசருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து உடனடியாகத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்ட நிகழ்ச்சிகள் சட்டமன்றத்தில் முடிந்த பின்னல் சட்டமன்றம் நடக்காத காலத்தில், தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து முதல்வர் அவர்களைக் கலந்து பின்னர் முடியுமானல் ஒரு குழு அமைத்து அவர்களுடைய பரிந்துரைகளைக் கேட்டு—லேபர் என்பது கன்கரன்ட் சப்ஜக்ட் என்பதையும் மனதில் வைத்து அவர்கள் ஆலோசனை சொல்வார்களானல் அதைப் பற்றிப் பரிசீலித்து ஏற்ற திருத்தங்கள் பொதுவாக தொழிலாளர் நலச் சட்டங்களுக்குக் கொண்டு வரலாம் என்பது நம்முடைய புரட்சித் தலைவர் கருத்தாகும். அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். உமாநாத் : இந்தமாதிரி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை முறியடிக்கவும், தொழிற் சங்கங்களை உடைக்கவும் இந்த மாதிரி பாக்டரிகளை மூடுவது என்ற நிகழ்ச்சி பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் பாக்டரிகளை மூடுவது என்பதைத் தடை செய்யக் கூடிய சட்டத்தை இந்த மாநில அவையிலோ அல்லது அதற்கு அதிகார வரம்பு இருக்கிறது என்று சொன்னல் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசோ செய்வார்களா ?

1977 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சில கேள்விகள் சங்கடமான இடத்திற்குக் கொண்டு வந்து விடுகிறது. இந்தத் தொழிற்சாலை மூடப்படவில்லை. இந்தத் தொழிற்சாலையில் 15—5—1977-ல் வேலை நிறுத்தம் செய்வதாக 2—5—1977 அன்று வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 14 நாள் நோட்டீஸ் இருந்திருக்க வேண்டும். இடையில் 9—5—1977-ல் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். தொழிற்சாலை மூடவில்லை. அவர்களுடைய முக்கியமான பிரச்சினை ஊதியம், பஞ்சப்படி போன்றவைகள். அட்ஜுடிகேஷனுக்கு 25—7—1977-ல் அனுப்பப்பட்டும் தொழிலாளர்கள் இன்னும் வேலைக்குப் போகாமல் இருக்கிறார்கள். இருந்தாலும் லேபர் கமிஷனரை அழைத்து மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தச் சொல்லியிருக்கிறேன். முதலாளிகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்துகிறார்கள். சுமுகமான முறையில் காரியம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சொல்லுகிறேன்—தொழிற்சாலை மூடப்படவில்லை ; தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கேட்ட கேள்வி கொள்கைப் பிரச்சினை.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தங்கள் மூலம் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது—மாண்புமிகு திரு. சுப்பு அவர்களுடைய மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும் போது, சுப்பு அவர்கள் அந்தத் தொழிற்சங்கத் தலைவராக இல்லை என்று சொன்னார்கள். அவ்வாறு தொழிற்சங்கத் தலைவராக இருந்தால்தான் அந்தத் தொழிற்சாலையைப் பற்றிக் கேள்வி கேட்க வேண்டுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத்தலைவர் அவர்களே, என்னுடைய பதில் அதுவல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அமைச்சர்களும், எல்லோருமே நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய வந்திருப்பவர்கள். அதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர்அவர்களுக்குச் சொல்ல விரும்பிய தகவல் அவர் அந்தச் சங்கத்தின் தலைவராக இல்லை என்ற காரணத்தால் அந்த நிறுவனத்தின் பெயரைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டி இனி மேலாவது நிறுவனத்தின் பெயரைச் சரியாகக் கொடுத்தால் நல்ல பதிலை நாங்கள் தயாரித்துக் கொடுக்க வசதியாக இருக்கும் என்றுதான் கேட்டுக்கொண்டேன், இது ஒரு வேண்டுகோள். Take it for what it is worth.

திரு. ப. உ. சண்முகம் : இதுவரையில் நாங்கள் அறிந்த மரபு என்னவென்றால் கேள்வி தவறாகப் போட்டுவிடுவார்களானால் அந்த இலாகாவோ அல்லது அமைச்சர்அவர்களோ அந்தக் கேள்வியைத் திருத்தி அனுமதிப்பார்கள், இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் கேள்வி தவறாக இருந்திருக்குமானால், அமைச்சர் திருத்தியிருக்கலாம், அல்லது அந்த இலாக்கா திருத்தியிருக்கலாம், இதிலே அப்படித் திருத்தாமல் அனுமதிக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1977 ஜூலை 29

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி திருத்தியமைக்கப்பட்டு பதிலளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் முதலிலேயே சொன்னதைக் கேட்டு இருந்தால் நன்ருகப் புரிந்து கொண்டிருக்கலாம்.

திரு. ஆர். உமாநாத் : கேட்ட கேள்விக்குத் துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். மூலக் கேள்வியைப் பொறுத்து அல்ல, அதிலிருந்து வருகின்ற துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். பல நேரங்களில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முறியடிப்பதற்காக தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்பது பேச்ட், இதை அவர் மறுக்க முடியாது. துணைக் கேள்வி—மாண்புமிகு அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் சொன்னது மாதிரி கொள்கைப் பிரச்னை எழுப்பப்படவில்லை—என்ற முறையிலே இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கையாக, மூடப்படுவதைத் தடுக்கக்கூடிய முறையிலே, சட்டம் கொண்டு வரப்படுமா, அப்படிக் கொண்டு வரப்படக்கூடிய இன்பர்மேஷன் அல்லது புரப்போஸல் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சியாப்டர் 5-பி என்ற புது அத்தியாயத்தை மத்திய அரசுத் தொழில் தகராறுகள் சம்பந்தப்பட்ட வரையில் இணைத்திருக்கிருர்கள். அதிலே லே ஆப், ரிட்ரன்ச்மெண்ட், குலோஷர் ஆகியவைகளுக்குத்தான் பொருந்துமே தவிர, லாக்கவுட்டுக்கு அல்ல. லாக்கவுட்டைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு மாநில அரசு தலையிட முடியுமோ அந்த அளவிற்குச் செய்திருக்கிருேம். ஒருக்கால் மத்திய அரசு லாக்கவுட்டையும் இதில் இணைத்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். Chapter V (i) brefers to lay off, retrenchment and closure Unfortunately 'lock-out" has been left-out. அதைப்பற்றியும் பரிசீலனை செய்து தொழிலாளர்கள் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுகிறபோது அந்தக் குழுவிலே இப்படிப்பட்ட நல்ல ஆலோசனைகளையெல்லாம் சொல்வார்களானல் அதை நன்ருகப் பரிசீலனை செய்வதற்கு ஆவன செய்யலாம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலே, தொழிலாளர்களுடைய குறைகள் பற்றி அவர்களுடைய நியாயமான சட்டப்பூர்வமான கோரிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தம் முடிந்த பிறகும்கூட மானேஜ்மெண்டார் அதைப்பற்றி துரிதமாக நடவடிக்கை எடுக்காததும் அந்த விவரங்கள் வந்ததற்குப் பிறகு லேபர் ஆபீஸர் மற்றும் அதிகாரிகள் தலையிட்டு எடுக்கின்ற நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்படாததாலும்தான் சட்டப்படியான வேலை நிறுத்தம் என்று முன்பு வந்து, பின்னர் சட்டவிரோதமான வேலை நிறுத்தம் என்று சொல்லக்கூடிய நிலைமையும் ஏற்பட்டது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இதுபோன்ற நிலைமைகளில் துரிதமாக நடவடிக்கை எடுத்துப் பைசல் செய்ய என்ன நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுக்கப் போகிருர்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1977 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சில கேள்விகள், சில சங்கடங்களை உண்டாக்கிவிடுகின்றன என்பதைச் சொல்லியாக வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் 31—3—1977-இல் முடிந்தபிறகு ஒப்பந்தம் செக்ஷன் 19(2) ஆப் தி இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட், தொழில் தகராறுகள் சட்டத்தின் 19(2)-வது விதியின்கீழ் 60 நாட்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கவேண்டும். "Settlement will stand terminated after the expiry of sixty days." என்று தொழில் தகராறுகள் சட்டம் 19(2)வது விதியின் பிரகாரம் கொடுத்து அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவது மரபு. ஆனால் இங்கே 31—3—1977 முடிந்தவுடனே மறுநாளே 1—4—1977 அன்றே கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. அது மட்டுமல்ல, 14 நாட்கள் நோட்டீஸ் வேலை நிறுத்தம் செய்வதாகக் கொடுத்து, அதற்கு முன்னதாகவே வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. இந்தப் பிரச்சினையில் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் எவ்வளவு சுமுகமாக முடிக்கவேண்டுமோ அந்த அளவிற்கு முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. அறிவிப்பு.

(1) தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (எண் 2/1977).

(2) 1977-ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (எண் 3/77).

(3) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தத் சட்ட முன்வடிவு (எண் 4/77).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/77), 1977-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் ஊராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/77) மற்றும் தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு ஊராட்சிகள் பதவிக்கால நீடிப்பு) திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/77) ஆகியவை 27—7—1977-ஆம் தேதியன்று சட்டமன்ற மேலவை